# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S. 147/2023

# CNR.No.TNCB19000

Date 10.03.2026 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வீராசாமி | **வயது** | 52 |
| **த/பெ** | **துரைசாமி** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | **பள்ளேபாளையம்** | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 10th March 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பணம் வட்டிக்கு கொடுப்பதுதான் எனது தொழில் என்றால் சரியல்ல. விவசாயம் நிலம் எனக்கு சொந்தமாக இல்லை. குத்தகைக்கு ஓட்டி வருகிறேன். பிரதிவாதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ரயில்வேயில் வேலை செய்கிறார். அவரை எப்படி தெரியும் என்றால் மாவழகன் என்பவர் மூலம் தெரியும் மாவழகன் சொல்லிதான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். அவர் அழைத்து வரும் அனைவரிடமும் மாவழகன் கமிசன் பெற்றுக் கொள்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாவழகன் என்னிடம் கமிசன் பெற்றுக் கொள்வார் என்றால் இல்லை.

திம்மராயம்பாளையத்தில் பத்மநாபன் என்பவரை தெரியும். அவரும் பிரதிவாதியும் நண்பர்கள். மாவழகன். பத்மநாபன் ஆகியோர்களும் நண்பர்கள். கடனுறுதி சீட்டை எங்கு வைத்து யார் எழுதினார்கள் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதியை எந்த வருடத்தில் இருந்து எனக்கு தெரியும் என்றால் ஞாபகம் இல்லை. கடனுறுதி சீட்டு தாக்கல் செய்வதற்கு 5, 6 வருடங்களுக்கு முன்பே தெரியும் என்றால் 3 வருடங்களாக தெரியும். அவ்வாறு தெரிந்ததில் இருந்தே அவருக்கும் எனக்கும் வரவுசெலவு உண்டு என்றால் அவ்வப்போது பெற்றுக் கொண்டு திருப்பி கொடுத்து விடுவார்.

அந்த சமயத்தில் அவர் வாங்கிய பணத்தை கொடுத்து விடுவார் என்றால் சிறு சிறு தொகைகளை கொடுத்து விடுவார். சிறு சிறு தொகை என்பது அவ்வப்போது வந்து ரூ.5, 000, அல்லது ரூ. 10,000 பெற்றுக்கொண்டு திருப்பி கொடுத்து விடுவார். இந்த வழக்கு தொகைக்கு முன்பாக வாங்கிய தொகையை திருப்பி கொடுத்து விட்டார் என்றால் சரிதான். இதே தாவாவை போன்று இந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இதோடு சேர்த்து மற்றொரு வழக்கு உள்ளது. அந்த வழக்கிலும் பிரதிவாதி ஒரு அரசு ஊழியர் என்றால் சரிதான்.

அதில் சாட்சி கையெழுத்து போட்டவரும் இந்த வழக்கில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவரும் ஒரே சாட்சிகள் என்றால் சரிதான். எனக்கு வட்டி தொழில்தான் முழு நேர தொழில் என்றும் அரசு ஊழியர்களுக்கு மட்டுமே கடன் கொடுப்பேன் என்றும் அவர்கள் கடனை திருப்பி கொடுத்த பின்னும் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அவர்களது சொத்தை ஜப்தி செய்வதுதான் எனது வழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய தொகையை எனக்கு செலுத்தி விட்டார் என்றும் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த கடனுறுதி சீட்டை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.